# நீங்கள் நுண்ணுயிர்கொல்லிகளை அவதானத்துடன் பயன்படுத்துவது அவசியமாகும்.

பண்ணையாளர்கள்

மனிதர்களிலும் விலங்குகளிலும் தொற்றுக்களைக் கட்டுப்படுத்தவும் சிகிச்சையளிக்கவும் நுண்ணுயிர் கொல்லிகள் அத்தியாவசியமான மருந்துப்பொருட்களாகும்.

தற்போது இவை தாக்குத்திறனை விரைவாக இழந்து வருகின்றன.

**நீங்கள் அறிந்துகொள்ள வேண்டியவை :**

- இம்மருந்துப்பொருட்கள் அளவுக்கதிகமாகவும் தவறான முறையிலும் பயன்படுத்தப்படுவதால் நோய்க்கிருமிகள் குறித்த நுண்ணுயிர்கொல்லிகளுக்கெதிராக எதிர்ப்பு சக்தியை உருவாக்கும் அபாயம் ஏற்படுகின்றது. இவ்வாறு எதிர்ப்பு சக்தி பெற்றுக்கொள்ளப்பட்டால் நோய்க்கிருமிகளுக்கு எதிராக நுண்ணுயிர்கொல்லிகள் தொழிற்பட முடியாததால் அவற்றினை சிகிச்சைக்காக பயன்படுத்த முடியாத நிலை ஏற்படுகின்றது. இந்நிகழ்வு நுண்ணுயிர்கொல்லி எதிர்ப்புசக்தி (AMR) எனப்படும்.
- AMR மனிதன் மற்றும் சகல தரைவாழ், நீர்வாழ் விலங்குகளின் சுகாதாரத்துக்கும் பொதுநலத்துக்கும் ஒரு அச்சுறுத்தலாகும். அத்துடன் அதிகரித்துக்கொண்டிருக்கும் (AMR) நுண்ணுயிர்கொல்லி எதிர்ப்புசக்திக்கு ஈடுகொடுக்கும் வகையில் புதிய நுண்ணுயிர்கொல்லிகள் கண்டுபிடிக்கப்படுவதில்லை.
- ஆகையால் பாவனையிலுள்ள நுண்ணுயிர்கொல்லிகளையும் அவற்றின் வினைத்திறனையும் பாதுகாப்பது அத்தியாவசியமானது. இந்த விலைமதிப்பற்ற மருந்துகளை பொறுப்புடனும் துல்லியமான அளவிலும் பயன்படுத்தி மனிதர்களினதும் விலங்குகளினதும் சுகாதாரத்தினையும் பொதுநலத்தினையும் பேணுவதற்கு உதவுக.

## நீங்கள் எமக்குத் தேவை



“நுண்ணுயிர்கொல்லி பாவனையாளராக நுண்ணுயிர்கொல்லிகளின் வினைத்திறனை பேணிப்பாதுகாக்க செயலாற்ற வேண்டியுள்ளது.”

- பண்ணையாளர்களே! சிறந்த விலங்கு முகாமைத்துவ நடைமுறைகள் உயிரியல் காப்பு நடைமுறைகள், தடுப்பூசி வழங்கல் மற்றும் சிறந்த சுகாதார நடைமுறைகளை நடைமுறைப்படுத்தி, பண்ணை விலங்குகளில் நுண்ணுயிர்கொல்லிகளை பொறுப்புடனும் துல்லியமான அளவிலும் பயன்படுத்துவதை உறுதிசெய்க.

- நுண்ணுயிர்கொல்லிகளுக்கெதிராக எதிர்ப்பு சக்தியைக் கொண்ட நோய்க்கிருமிகளை பொருத்தமான முறையில் கையாளுவது உலக விலங்கு சுகாதார நிறுவனத்தின் (OIE) முக்கிய நோக்கமாகும். எனவே OIE அறிமுகப்படுத்தியுள்ள சர்வதேச நியமங்களை பின்பற்றி நுண்ணுயிர்கொல்லிகளின் தொற்றுக்களுக்கெதிராக வினைத்திறனை பாதுகாக்க உதவுக.

மேலதிக விபரங்களுக்கு: www.oie-antimicrobial.com

# பண்ணையாளர்கள் !
# நீங்கள் தான் உற்பத்தியாளர்கள் !




- உணவுக்கான விலங்கு உற்பத்தியாளர்களே!

  பாரியளவு விலங்கு உற்பத்தியாளர்களாகவோ / மீன் பண்ணையாளர்களாகவோ / கொல்லைப்புற உற்பத்தியாளர்களாகவோ நீங்கள் மனிதர்களுக்கு புரத உணவு அளிக்கும் முக்கிய பங்காற்றுகின்றீர்கள் நீங்கள் பண்ணைவிலங்குகளின் சுகாதாரம் மற்றும் பொதுநலனை பேணிப்பாதுகாப்பதன் மூலம் மனித உணவுக்காக பாதுகாப்பான சுகாதாரமான மற்றும் தூய்மையான விலங்குற்பத்தி பொருட்களை வழங்குவதற்கான முக்கிய பொறுப்பினை வகிக்கிறீர்கள்.

- பண்ணையாளர்களே! சிறந்த விலங்கு முகாமைத்துவ, உயிரியல்காப்பு, தடுப்பூசி வழங்கும் நடைமுறைகள் மற்றும் சிறந்த சுகாதார நடைமுறைகளை கடைப்பிடித்து, பண்ணை விலங்குகளில் நுண்ணுயிர்கொல்லிகளை பொறுப்புடனும் துல்லியமான முறையிலும் பயன்படுத்துவதை உறுதிசெய்க.

## தொற்றுகளுக்கெதிராக நுண்ணுயிர்கொல்லிகளின் போராடும் வினைத்திறனை பாதுகாக்க உதவுக.

1. கால்நடை வைத்தியரினால் பரிந்துரைக்கப்பட்ட நுண்ணுயிர்கொல்லிகளை மாத்திரம் பயன்படுத்துக. எல்லாத் தொற்றுகளுக்கு சிகிச்சை வழங்க நுண்ணுயிர்கொல்லிகள் அவசியமில்லை.
2. கால்நடைவைத்தியரினால் பரிந்துரைக்கப்பட்ட மருந்து அளவுகளை துல்லியமாக பின்பற்றுக.
3. பரிந்துரைக்கப்பட்ட சிகிசசைக்காலத்தினை துல்லியமாக பின்பற்றுக.
4. அனுமதிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து மாத்திரம் நுண்ணுயிர்கொல்லிகளை கொள்வனவு செய்க.
5. சிறந்த விலங்கு வேளாண்மை செயன்முறைகள், உயிர்காப்பு நடைமுறைகள் மற்றும் சிறந்த பராமரிப்பு செயன்முறைகளை பின்பற்றுக. பண்ணையாளர்கள் தமது விலங்குகளில் தொற்றுக்களை கட்டுப்படுத்த கால்நடை வைத்தியரின் உதவியுடன் சிறந்த சுகாதார நடைமுறைகளை வகுத்துக்கொள்ள வேண்டும்.
6. சகல நுண்ணுயிர்கொல்லிகள் பாவனை, தரக்கட்டப்பாட்டு ஆய்வுகூட பெறுபேறுகள், கண்காணிப்புத் திட்டம் பற்றிய பதிவேடுகளை கவனமாகப் பேணுதல்.




@ மேலதிக விபரங்களுக்கு: **www.oie-antimicrobial.com**

Funded by UK Government



WORLD ORGANISATION FOR ANIMAL HEALTH
*Protecting animals, preserving our future*